# பொதுப்பணித் துறை
# கட்டடங்கள்

## கோரிக்கை எண். 39
## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2012 – 2013

**கே.வி.இராமலிங்கம்**
பொதுப்பணித் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2012

பொதுப்பணித் துறை
கட்டடங்கள்

கோரிக்கை எண். 39
கொள்கை விளக்கக் குறிப்பு
2012 – 2013

கே.வி.இராமலிங்கம்
பொதுப்பணித் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2012

# பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| 1. | பொது | 1 |
| 2. | நிதி ஒதுக்கீடு 2012 – 2013 | 7 |
| 3. | மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் | 12 |
| 4. | துறைவாரியான பணிகள் (2012 – 2013) | 21 |



# பொருளடக்கம்

| வ. எண். | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| 1. | பொது | 1 |
| 2. | நிதி ஒதுக்கீடு 2012 – 2013 | 7 |
| 3. | மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் | 12 |
| 4. | துறைவாரியான பணிகள் (2012 – 2013) | 21 |

# பொதுப்பணித் துறை

## கட்டடங்கள்

### 1.0. பொது

பொதுப்பணித் துறையின் கட்டட அமைப்பு, மாநில அரசின் பொதுக் கட்டடங்களின் கட்டுமானம் மற்றும் தொடர்புடைய பணிகளை மாநில அரசின் பல்வேறு அரசுத் துறைகளின் தேவைகளுக்கு ஏற்ப திட்டமிடுதல், வடிவமைத்தல் மற்றும் கட்டுமானம் ஆகியவற்றை நிறைவேற்றும் பொறுப்பு வகிக்கின்றது.

மேலும், பொதுப்பணித் துறையின் கட்டட அமைப்பு, மாநில மற்றும் மத்திய அரசு சார்ந்த நிறுவனங்கள், கழகங்கள் ஆகியவற்றுக்கான கட்டட கட்டுமானப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. இவற்றைத் தவிர, நினைவுச் சின்னங்கள், நினைவகங்கள் கட்டுதல் மற்றும் அமைத்தல் ஆகிய பணிகளும் இவ்வமைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், புராதான கட்டடங்களை சீரமைத்தல் மற்றும் புனரமைத்தல் ஆகிய பணிகளையும் இவ்வமைப்பு மேற்கொள்கிறது.

மேற்குறிப்பிட்டவற்றைத் தவிர, அவசர கால சுனாமி மறுகட்டுமானத் திட்டம் போன்ற பேரிடர் மறுகட்டமைப்பு கட்டடப் பணிகளை செயல்படுத்துதல், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், தொகுதி மேம்பாட்டு திட்டப் பணிகளையும் இவ்வமைப்பு மேற்கொண்டு வருகிறது.

சென்னை மற்றும் உதகமண்டலத்திலுள்ள மேதகு ஆளுநர் மாளிகைகள், மாண்புமிகு நீதியரசர்கள், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் பிற மிகமிக முக்கிய பிரமுகர்களுக்கான மாளிகைகள், தலைமைச் செயலகம், அரசு ஆய்வு

மாளிகைகள் மற்றும் சுற்றுலா மாளிகைகள் ஆகியவற்றை இவ்வமைப்பு பராமரித்து வருகிறது.

நீதித் துறை மற்றும் ஊழல் மற்றும் கண்காணிப்புத் துறை ஆகியவற்றின் கோரிக்கையின் அடிப்படையில் கட்டடங்களின் தள மதிப்பீடு பணிகளை மேற்கொண்டு வருகிறது. திரை அரங்குகள், பொதுக் கட்டடங்களுக்கு கட்டட உறுதிச் சான்றிதழ் மற்றும் தனியார் கட்டடங்களில் இயங்கும் அரசு அலுவலகங்களுக்கான நியாய வாடகை சான்றிதழ் ஆகியவற்றினை இவ்வமைப்பு வழங்கி வருகிறது.

கட்டட அமைப்பு, மிக முக்கிய மற்றும் மிகமிக முக்கிய பிரமுகர்கள் வருகையின் போது மேற்கொள்ளப்படும் பணிகளான, மேடை அமைத்தல், தடை அரண் அமைத்தல், ஒலி மற்றும் ஒளி அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.



திட்டம் மற்றும் வடிவமைப்பு கண்காணிப்புப் பொறியாளர் அவர்களின் கட்டுப்பாட்டில் ஒரு செயற் பொறியாளர் அவர்களின் தலைமையின் கீழ், சென்னை தரமணியில் உள்ள கட்டட ஆராய்ச்சி நிலையம், பொது மக்களுக்கு கட்டட கட்டுமானப் பொருட்கள் மற்றும் நடைமுறைகளின் தர சோதனை மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகிய சேவைகளை அளித்து வருகிறது.

அனைத்து புதிய கட்டடங்களுக்கான ஆரம்பநிலை கட்டட வரைபடம், விரிவான வரைபடங்கள், கட்டட முகப்புத் தோற்றம் மற்றும் குறுக்கு வெட்டுத் தோற்ற வரைபடங்கள் தயாரித்தல் மற்றும் வண்ணப் பூச்சு திட்டமிடுதல் போன்றவற்றை கட்டட அமைப்புடன் இணைக்கப்பட்டு இயங்கி வரும் கட்டடக் கலைப் பிரிவு மேற்கொண்டு வருகிறது. மேலும் இப்பிரிவு, பெருந் திட்ட வளாகங்களுக்கான தள வரைபடம் தயாரிக்கும் பணிகளுடன்,

நினைவகங்கள், மணிமண்டபங்கள், பூங்காக்கள் ஆகியவற்றுக்கான வடிவமைப்புகளை தயாரிக்கும் பணிகளையும் செய்து வருகிறது. மேலும், ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையம், பள்ளிகளுக்கான வகுப்பறைகள், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர் விடுதிகளுக்கான மாதிரி வடிவமைப்பு வரைபடம் தயாரித்தல் போன்ற இதர பணிகளையும் செய்து வருகிறது.

## 1.1. அமைப்பு

பொதுப்பணித் துறை கட்டட அமைப்பு, முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் சென்னை, திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் மூன்று மண்டலத் தலைமைப்பொறியாளர்களுடன் 50 கோட்டங்களை (கட்டட பணிகளுக்காக 43 கோட்டங்கள் மற்றும் மின் பணிகளுக்காக



7 கோட்டங்கள்) உள்ளடக்கிய 13 வட்டங்களுடன் (கட்டட பணிகளுக்காக 11 வட்டங்கள் மற்றும் மின் பணிகளுக்காக 2 வட்டங்கள்) இயங்கி வருகிறது.

தலைமைக் கட்டடக் கலைஞரின் கட்டுப்பாட்டில் உள்ள கட்டடக் கலைப் பிரிவு, இணைத் தலைமைக் கட்டடக் கலைஞர், முதுநிலை கட்டடக் கலைஞர்கள், உதவி கட்டடக் கலைஞர்கள் மற்றும் இளநிலை கட்டடக் கலைஞர்கள் ஆகியோர்களைக் கொண்டு முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களின் நிருவாகத் தலைமையில் இயங்கி வருகிறது.

செயற் பொறியாளர் நிலையிலான மூன்று துணை இயக்குநர்கள் தலைமையில் திருச்சி, மதுரை மற்றும் சென்னையில் இயங்கி வரும் பொதுப் பணி பணியாளர் பயிற்சி நிலையம், திருச்சியை தலைமையிடமாகக் கொண்டு கண்காணிப்புப் பொறியாளர் நிலையில்

ஒரு இயக்குநர் அவர்களது ஒட்டுமொத்த கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. இந்த பயிற்சி நிலையம், பொதுப் பணித் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது.

## 2.0. நிதி ஒதுக்கீடு 2012–2013

**2012–2013**–ம் நிதியாண்டில் கோரிக்கை எண்.**39**–ன் கீழ் ரூ.**1025.80** கோடி நிதி ஒதுக்கீட்டில் பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**(ரூ. கோடியில்)**

| | | |
|---|---|---|
| 1. | மூலதனக் கணக்கு (திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகள்) | 562.79 |
| 2. | கணக்குகளிடையே மாற்றம் | 250.47 |
| 3. | வருவாய்க் கணக்கு<br>(அ) பராமரிப்பு<br>(ஆ) பணியமைப்பு<br>(பொதுப்பணித் துறை – தலைமைச் செயலகம் உட்பட) | <br>39.42<br><br>172.90 |
| 4. | கடன் கணக்கு | 0.22 |
| | **மொத்தம்** | **1025.80** |



இவைகளுடன் செலுத்துதல் கணக்குத் தலைப்பின் கீழ் இதர துறையைச் சேர்ந்த பணிகளான நபார்டு கடனுதவியின் கீழ் செயல்படுத்தப்படும் பள்ளி கட்டடப் பணிகள், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியருக்கான விடுதிகள், கால்நடை மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள், அவசரகால சுனாமி மறுகட்டுமானத் திட்டப் பணிகள், உலக வங்கி / மைய அரசு நிதி உதவியுடனான மருத்துவமனைக் கட்டடப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 2.1. திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகள் துறைவாரியான ஒதுக்கீடு 2012–2013 கோரிக்கை எண்.39–மூலதனக் கணக்கு

| வ. எண். | துறைகளின் பெயர் | வரவு செலவு 2012 –2013 (ரூ. கோடியில்) | விழுக்காடு |
|---|---|---|---|
| 1. | பொதுப்பணித் துறை | 35.47 | 6.30 |
| 2. | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 250.14 | 44.45 |
| 3. | உள் துறை | 139.21 | 24.73 |
| 4. | பதிவுத் துறை | 27.16 | 4.83 |
| 5. | வருவாய்த் துறை | 52.57 | 9.34 |
| 6. | பிற துறைகள் | 58.24 | 10.35 |
| | மொத்தம் | 562.79 | 100.00 |

## 2.2. அரசுக் கட்டடங்களின் பராமரிப்பு

2012–2013–க்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கை எண்.39–ன் கீழ் ஆய்வு மாளிகைகள், சுற்றுலா



மாளிகைகள், பொதுப்பணித் துறை அலுவலக கட்டடங்கள், அரசு அலுவலர் குடியிருப்புகள் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களின் அரசு மாளிகைகளுக்கு உரிய பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொள்ள ரூ.39.42 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2012–2013–க்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் பிற துறைகளின் மானியக் கோரிக்கைகளின் கீழ் மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகள், பள்ளிகள், வருவாய் நிருவாகம், பதிவுத் துறை, உள் துறை, வேளாண்மைத் துறை தொடர்பான அலுவலகக் கட்டடங்கள், மேதகு ஆளுநர் மாளிகை, தலைமைச் செயலகம், மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதியரசர்களின் அரசு மாளிகைகள் மற்றும் இதர அரசுக் கட்டடங்கள் ஆகியவற்றின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள ரூ.233.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.3. புராதான கட்டடங்களை மறுநிர்மானம் மற்றும் மறுசீரமைத்தல்

மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து புராதான கட்டடங்களின் தற்போதைய நிலையை பரிசீலிக்கவும், இந்த கட்டடங்களை அதன் புராதானத் தன்மை மாறாமல் பாதுகாத்தல், மறுசீரமைத்தல், மறுநிர்மானம் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கான அறிக்கை அளிப்பதற்காகவும், சென்னை அண்ணா பல்கலைக் கழக கட்டட கட்டுமான பொறியியல் துறையின் முன்னாள் முதல்வர், முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித் துறை மற்றும் தலைமை திட்ட கலைஞர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஆகியோர்களைக் கொண்ட வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. சென்னை சேப்பாக்கத்திலுள்ள கல்சா மாளிகை குறித்த இந்த வல்லுநர் குழுவின் அறிக்கை அரசால் ஏற்கப்பட்டுள்ளது.



## 2.4. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்

### 2.4.1. மறைந்த கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களுக்கு மணிமண்டபம் அமைத்தல்

தமிழ்நாட்டின் தென் மாவட்ட மக்களுடைய கோரிக்கைகளின்படி, முல்லைப்பெரியார் அணையை கட்டிய கர்னல் (மறைந்த) ஜான் பென்னிகுயிக் அவர்களுக்கு தேனி மாவட்டம் லோயர் கேம்ப்பில் மணிமண்டபம் கட்டப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 08.01.2012–ல் அறிவிக்கப்பட்டது. இப்பணியை ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள ஆணைகள் வெளியிடப்பட்டு, பணிகள் விரைவில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

### 2.4.2. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடத்தை மேம்படுத்துதல் மற்றும் அழகுபடுத்துதல்

‘‘புரட்சித் தலைவர்’’ என்றும் ‘‘மக்கள் திலகம்’’ என்றும் மக்களால் போற்றப்படுபவரும், தொடர்ந்து மூன்று

முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும் இருந்த பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் சென்னை மெரினா கடற்கரையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்திற்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டு, இவ்விடம் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நினைவிடமாக 1988–ல் மேம்படுத்தப்பட்டது. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிடத்தின் முகப்பு அழகுபடுத்தப்பட்டு, முன்புற சுற்றுச் சுவர் மற்றும் நுழைவு வாயில் வளைவு ஆகியவை மேம்படுத்தப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். நினைவிடத்தின் நுழைவு வாயிலின் வளைவினை மாற்றியமைத்தல் மற்றும் முன்பக்க சுற்றுச் சுவரினைப் புதுப்பித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள ரூ.3.40 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடத்தை



புதுப்பொலிவுடன் புனரமைக்க மேலும் ரூ.4.30 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இவ்விரு பணிகளும் தொடங்கப்பட்டு உள்ளன.

### 2.4.3. பேரறிஞர் அண்ணா நினைவிடத்தினை மேம்படுத்துதல்

பேரறிஞர் அண்ணா என அழைக்கப்பட்ட, டாக்டர் சி.என். அண்ணாதுரை அவர்கள், திராவிட இயக்கத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க தலைவராவார். இவரது நினைவகம் 1973–ம் ஆண்டு சென்னை மெரினா கடற்கரையில் 11.20 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டது. தற்பொழுது, பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவகமும் புனரமைக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். பேரறிஞர் அண்ணா நினைவிடத்தினை புதுப்பொலிவுடன் புனரமைக்க ரூ1.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டு உள்ளன.

### 2.4.4. மகாத்மா காந்தி மண்டபத்தினை மேம்படுத்துதல்

சென்னை, கிண்டி, சர்தார் படேல் சாலையில் அமைந்துள்ள மகாத்மா காந்தி மண்டபம் புனரமைக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். ரூ.11.61 கோடி மதிப்பிலான இப்பணி விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

### 2.4.5. சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் பல்நோக்கு தனிச் சிறப்பு மருத்துவமனை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை தொடர்ந்து, சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள பிளாக்–ஏ கட்டடத்தினை பல்நோக்கு தனிச் சிறப்பு மருத்துவமனையாக மாற்றவும் பிளாக்–பி கட்டடத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி



ஒன்றைத் தொடங்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ரூ.26.92 கோடி மதிப்பிலான பல்நோக்கு தனிச் சிறப்பு மருத்துவமனை பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் ஆய்வில் உள்ளன.

### 2.4.6. ஸ்ரீரங்கத்தில் தேசிய சட்டப் பள்ளி

சட்டக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்காக மேலாண்மை சிறப்புத் தகுதி மையம் அமையும் வகையில் திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் தேசிய சட்டப் பள்ளி வளாகம் ரூ.100.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இப்பணி விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

### 2.4.7. நாமக்கல் கவிஞர் மாளிகையின் முகப்புத் தோற்றத்தினை மேம்படுத்துதல்

சென்னை தலைமைச் செயலகத்தின் நாமக்கல் கவிஞர் மாளிகையின் முகப்புத் தோற்றத்தை மேம்படுத்த மாண்புமிகு

தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இக்கட்டடம் 1974–1978 ஆண்டுகளில் தரை மற்றும் 10 தளங்களுடன் கட்டப்பட்டது. இக்கட்டடத்தின் முகப்புத் தோற்றத்தை பாரம்பரிய மற்றும் நவீன கட்டடக் கலை இரண்டையும் கலந்து, ஓர் அழகிய தோற்றம் கொடுக்கும் வகையில் அமையுமாறு பணிகளைச் செய்ய ரூ.28.00 கோடிக்கு நிருவாக ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஆரம்பகட்ட பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

### 2.4.8. திருச்சியில் உள்ள மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையை தனிச்சிறப்பு மருத்துவமனையாக தரம் உயர்த்துதல்

2011–2012–ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபோது, திருச்சியில் உள்ள மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனை, தனிச் சிறப்பு மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும்



என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இப்பணியை ரூ.53.97 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

### 2.4.9. கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 14.11.2011 அன்று நடைபெற்ற அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டின் போது கடலூர் மாவட்டத்திற்கு, புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டுவதற்கான அறிவிப்பினை வெளியிட்டார்கள். தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் இயங்கிவரும் கட்டடம் 1897–ல் கட்டப்பட்டு உள்ளதாலும், அனைத்து அலுவலர்களுக்கும் போதிய இடமின்மை காரணத்தாலும் மற்ற அலுவலகங்கள் வெவ்வேறு இடங்களில்

இயங்கி வருவதனாலும் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

**2.4.10. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம்**

2011–2012–ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபோது, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு புதிய கூடுதல் கட்டடம் கட்டப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் இயங்கிவரும் கட்டடம், மாவட்ட நிருவாகத்திற்கு தேவையான இடவசதியின்மை காரணத்தால், சீரிய நிருவாகத்திற்காக ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் புதிய கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.



**2.4.11. திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு பெருந்திட்ட வளாகம்**

2011–2012–ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபோது, திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், ஏனைய மாவட்ட அளவிலான அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகள் ஆகியவற்றிற்காக பெருந்திட்ட வளாகம் கட்டப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். திருப்பூர் புதிய மாவட்டமாக உருவாக்கப்பட்டுள்ளதால், தற்போதைய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே பல்வேறு அலுவலகங்களை உள்ளடக்கிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக பெருந்திட்ட வளாகம் ரூ.79.65 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளது.

## 3.0. துறைவாரியான பணிகள் (2012–2013)

### 3.1. பொதுப்பணித் துறை கட்டடங்கள்

### 3.1.1. சென்னை சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் குடியிருப்புகள் கட்டுதல்

3.1.1.1. தலைமைப் பொறியாளர், கண்காணிப்புப் பொறியாளர், செயற் பொறியாளர், உதவி செயற் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர் ஆகியோர்களுக்காக ஏற்கெனவே புதியதாக கட்டப்பட்டுள்ள **26** அரசு ஊழியர் குடியிருப்பு கட்டடத்தின் மேல், மேலும் **10** குடியிருப்புகளை ரூ.**2.18** கோடி மதிப்பீட்டில் கட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

3.1.1.2. ‘‘சி’’ வகை அரசு ஊழியர் குடியிருப்புகள் (7 கட்டடத் தொகுப்புகளில் 700 குடியிருப்புகள்) ரூ.77.29 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.



3.1.1.3. வங்கி, அஞ்சல் நிலையம் மற்றும் உட்புற சாலைகள் ஆகியவற்றிற்கான இடவசதியுடன் ‘‘டி’’ வகை அரசு ஊழியர் குடியிருப்புகள் **600** எண்ணிக்கை ரூ.**60.18** கோடி மதிப்பீட்டில், தற்போது அங்குள்ள பழைய ஓட்டு கூரை குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, புதியதாக கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.1.2. பகுதி–II திட்டங்கள் 2011–2012

3.1.2.1. 2012–2013–ம் ஆண்டில் முடிக்கப்பட உள்ள 2011–2012–க்கான பகுதி–II திட்டப் பணிகளின் விவரங்கள்:

| வ. எண் | பணிகளின் பெயர் | தொகை (ரூ. இலட்சத்தில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | கட்டட அமைப்பின், ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள 32 தலைமையிட உபகோட்ட உதவி செயற் பொறியாளர்களுக்கு புதிய ஈப்புகள் மாற்றீடு வகையில் கொள்முதல் செய்தல். | 172.13 | ஈப்புகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 2. | கட்டட அமைப்பின், திருச்சி மற்றும் மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர்களுக்கு 2 புதிய சீருந்துகள் கொள்முதல் செய்தல். | 10.50 | சீருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. |
| 3. | சென்னை, தரமணியில் உள்ள தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி மையத்தின் சோதனைக்கூடத்தில் ஆய்வக சோதனைக் கருவிகள் கொள்முதல் செய்தல். | 29.00 | ஆய்வக சோதனைக் கருவிகள் ஒரு பகுதி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ளவை கொள்முதல் செய்யப்படவுள்ளது. |
| 4. | சென்னை சேப்பாக்கம் வளாகத்தில் உள்ள கட்டட மைய மற்றும் பாதுகாத்தல் கோட்டத்தின் நூலக அரங்கை புதுப்பித்தல். | 26.00 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : ஜுலை 2012. |
| 5. | கடலூர் மாவட்டம், சிதம்பரம் பொதுப்பணித் துறை வளாகத்தில், உதவி செயற் பொறியாளருக்கு குடியிருப்பு கட்டும் பணி. | 17.35 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : ஏப்ரல் 2012. |
| 6. | திருநெல்வேலியில் செயற் பொறியாளருக்கு குடியிருப்பு கட்டும் பணி. | 20.00 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : ஏப்ரல் 2012. |
| 7. | திருச்சியில் பொதுப்பணித் | 7.70 | பணி முடிவுற்றது. |



| | | | |
|---|---|---|---|
| | துறை வளாகத்தில், கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்ட அலுவலகக் கட்டடம் கட்டும் பணி. | | |
| 8. | கோயம்புத்தூரில் பொதுப்பணித் துறை, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்ட கண்காணிப்புப் பொறியாளருக்கு குடியிருப்பு கட்டும் பணி. | 33.00 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : ஜுன் 2012. |

## 3.2. <u>நீதித்துறை</u>

3.2.1. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான 272 குடியிருப்புகள் கட்டும் பணிகள் ரூ.24.75 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை ஜுலை 2012–க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

3.2.2. சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் சட்ட அலுவலர்களுக்கான அலுவலக

கட்டடம் ரூ.5.70 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணி 2012–2013–ம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

3.2.3. நீதித் துறை கழகத்திற்கான மாநில மண்டல மையக் கட்டடங்கள் ஒவ்வொன்றும் ரூ.8.50 கோடி மதிப்பீட்டில், மொத்தம் ரூ.17.00 கோடி மதிப்பீட்டில், (ரூ.15.00 கோடி, 13வது நிதிக் குழு பங்களிப்பு மூலமும், ரூ.2.00 கோடி மாநில நிதி உதவியுடனும்) கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் முறையே மார்ச் 2013 மற்றும் ஆகஸ்ட் 2013–ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

3.2.4. நீதிமன்றத்திற்கு செல்வதற்கு முன்பாகவே சுமூகமான முறையில் வழக்குகளை விசாரித்து தீர்வு காண்பதற்காக ‘‘மாற்று வழி பிணக்குகள் தீர்வு மையங்கள்’’ தமிழகத்திலுள்ள 30 மாவட்டங்களில், 13–வது நிதிக் குழுவின் மானியத்துடன் ரூ.30.00 கோடி



மதிப்பீட்டில் கட்டி முடிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளின் முதற் கட்டமாக, ரூ.4.20 கோடி மதிப்பீட்டில் (13வது நிதிக் குழு ரூ.1.00 கோடி, மாநில நிதி ரூ.3.20 கோடி) சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் ‘‘மாற்று வழி பிணக்குகள் தீர்வு மையம்’’, ‘‘சட்ட சேவை ஆணைய கட்டடம்’’ மற்றும் 29 மாவட்டங்களில் ‘‘மாற்று வழி பிணக்குகள் தீர்வு மையம்’’ கட்டடங்கள் ரூ.29.00 கோடி (ஒவ்வொன்றும் ரூ.1.00 கோடி) மதிப்பில் கட்டும் பணி 2012–2013–ம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ளது. இப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்படவுள்ளன.

3.2.5. **2012–2013 மற்றும் 2013–2014–ம் ஆண்டுகளில் முடிக்கப்படவுள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் குறித்த பணிகள்:**

| வ. எண். | பணி நடைபெறும் இடம் | தொகை (ரூ.கோடியில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | சிவகங்கை | 7.98 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : ஜுன் 2012. |
| 2. | அறந்தாங்கி | 3.53 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : ஜுன் 2012. |
| 3. | கும்பகோணம் | 9.97 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : ஜுன் 2012. |
| 4. | தூத்துக்குடி | 8.88 | பணிகள் நடைபெற்று வருகின்றன. 3 நீதிமன்ற அரங்கங்களுக்கான பணித்தளம் அடையாளம் காணப்படஉள்ளது. |
| 5. | கள்ளக்குறிச்சி | 7.54 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : ஜுலை 2012. |
| 6. | திருச்செந்தூர் | 2.61 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : ஜுன் 2012. |



| | | | |
|---|---|---|---|
| 7. | திருவையாறு | 1.92 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : ஜுன் 2012. |
| 8. | குளித்தலை | 4.10 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : ஜுன் 2012. |
| 9. | இராசிபுரம் | 4.65 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : ஜுன் 2012. |
| 10. | பழனி | 3.83 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : ஆகஸ்ட் 2012. |
| 11. | திருவாரூர் | 10.85 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : டிசம்பர் 2012. |
| 12. | காட்பாடி | 3.22 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : ஜுன் 2012. |
| 13. | இராணிப்பேட்டை | 3.65 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : ஜுன் 2012. |
| 14. | குழித்துறை | 5.64 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : ஜுலை 2012. |

| | | | |
|---|---|---|---|
| 15. | ஓமலூர் | 3.03 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : ஜுன் 2012. |
| 16. | பரமக்குடி | 2.40 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : ஜுன் 2012. |
| 17. | திருவண்ணாமலை | 14.51 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : ஜுன் 2012. |
| 18. | சங்கரன்கோவில் | 3.81 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : டிசம்பர் 2012. |
| 19. | வேதாரண்யம் | 2.02 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : மார்ச் 2013. |
| 20. | பாலக்கோடு | 2.62 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : மார்ச் 2013. |
| 21. | திருச்சி | 22.64 | பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : டிசம்பர் 2013. |

**3.2.6. 2012–2013 மற்றும் 2013–2014–ம் ஆண்டுகளில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள**



**ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்பு பணிகள்:**

| வ. எண். | பணி நடைபெறும் இடம் | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1. | திருவாடனை | 1.87 |
| 2. | திருவள்ளூர் | 12.28 |
| 3. | இரணியல் | 2.65 |
| 4. | வால்பாறை | 2.85 |
| 5. | மேட்டுப்பாளையம் | 1.79 |
| 6. | திருமயம் | 1.73 |
| 7. | மேட்டூர் | 4.97 |

## 3.3. பள்ளிக் கல்வித் துறை

### 3.3.1. நபார்டு நிதி உதவித் திட்டங்கள்

அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிகளான கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல், பரிசோதனைக்கூடங்கள், கழிவறைகள் மற்றும் குடிநீர் வசதிகள் போன்ற திட்டப் பணிகளின் நிலைகள் பின்வருமாறு :

| கட்டம் | பள்ளிகளின் எண்ணிக்கை | தொகை (ரூ.கோடியில்) | முடிக்கப்பட்ட பணிகள் எண்ணிக்கை | 2012–2013 மற்றும் 2013–2014–ம் ஆண்டுகளில் முடிக்கப்படவுள்ள பணிகள் |
|---|---|---|---|---|
| கட்டம் – 6 | 232 | 161.32 | 232 | – |
| கட்டம் –7 | 195 | 131.69 | 182 | 12 (1 பணி கைவிடப்பட்டது) |
| கட்டம் –8 | 59 | 63.36 | 54 | 5 |
| கட்டம் – 9 | 362 | 410.74 | 305 | 57 |
| கட்டம்–10–A | 303 | 235.14 | 175 | 127 (1 பணி கைவிடப்பட்டது) |
| கட்டம்–10– B | 259 | 230.30 | 57 | 202 |

3.3.2. மேலும் 31 மாவட்டங்களில் உள்ள 269 அரசு மேல்நிலைப் பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் ரூ.264.77 கோடி மதிப்பீட்டில் கட்டம்–11–ல் மேற்கொள்ள உத்தேசிக்கப் பட்டுள்ளது.

**3.4. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை**



**3.4.1. 2012–2013 மற்றும் 2013–2014–ம் ஆண்டுகளில் முடிக்கப்படவுள்ள மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரிக் கட்டடங்கள் பின்வருமாறு :**

| வ. எண். | பணியின் பெயர் | தொகை (ரூ.கோடியில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | சிவகங்கையில் புதிய மருத்துவக் கல்லூரி. (கட்டம் 1, 2, 3) | 97.00 | கட்டம் I – பணிகள் முடிவடைந்தன. கட்டம் II, III – பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : செப்டம்பர் 2012. |
| 2. | சென்னை மருத்துவக் கல்லூரிக்கு புதிய கட்டடம். | 56.63 | இறுதி கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : ஜுன் 2012. |
| 3. | சென்னை எழும்பூரில் உள்ள அரசு மகப்பேறு மருத்துவமனையில் மகப்பேற்றியல் மற்றும் மகளிர் நோய் மருத்துவவியல் நிலையத்தில் சிறப்பு தகுதி மைய கட்டடம் கட்டுதல். | 56.32 | இறுதி கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : செப்டம்பர் 2012. |
| 4. | சென்னை திருவல்லிக்கேணி கஸ்தூரிபா காந்தி | 16.65 | இறுதி கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு : மே 2012. |

| | | | |
|---|---|---|---|
| | மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் சிறப்பு தகுதி மைய கட்டடம் கட்டுதல். | | |
| 5. | சென்னை குழந்தைகள் நல மருத்துவ நிலையத்திற்கு கூடுதல் கட்டடம் கட்டுதல். | 13.83 | இறுதி கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>இலக்கு : மே 2012. |
| 6. | சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் அடுக்குமாடி கட்டடம் கட்டுதல். (கட்டம் – 2) | 41.20 | இறுதி கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>இலக்கு : ஜூன் 2012. |
| 7. | செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சைக்கான தொகுதி கட்டடம் கட்டுதல். | 14.50 | இறுதி கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>இலக்கு : ஜூன் 2012. |
| 8. | சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 140 | 3.70 | இறுதி கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>இலக்கு : ஜூன் 2012. |



| | | | |
|---|---|---|---|
| | முதுகலை மாணவியர்களுக்கான விடுதி மற்றும் இதர கட்டடங்கள் கட்டுதல். | | |
| 9. | இராமநாதபுரத்தில் அரசு செவிலியர் கல்லூரி கட்டடம் கட்டுதல். | 1.00 | இறுதி கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>இலக்கு : ஜூன் 2012. |
| 10. | செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் புதிய செவிலியர் கல்லூரி கட்டடம் கட்டுதல். | 4.97 | இறுதி கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>இலக்கு : ஜூன் 2012. |
| 11. | சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் புற்றுநோய் பிரிவுக்கான தொகுதி கட்டடம் கட்டுதல். | 17.00 | இறுதி கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>இலக்கு : ஆகஸ்ட் 2012. |

**3.4.2. 2012–2013 மற்றும் 2013–2014–ம் ஆண்டுகளில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள மருத்துவமனை மற்றும் கல்லூரிக் கட்டடங்களின் விவரங்கள் பின்வருமாறு :**

| வ. எண். | பணியின் பெயர் | தொகை (ரூ.கோடியில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவிற்கான கட்டடம் கட்டுதல். | 2.35 | பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. |
| 2. | கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை தரம் உயர்த்துவதற்காக கட்டடங்கள் கட்டுதல். | 50.00 | பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. |
| 3. | திருவண்ணாமலையில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்காக கட்டடங்கள் கட்டுதல். | 130.88 | பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. |

**3.4.3. தமிழ்நாடு சுகாதார அமைப்புத் திட்டம்**

தமிழ்நாடு சுகாதார அமைப்புத் திட்டத்தின்கீழ், திருநெல்வேலி, திருச்சி,



தூத்துக்குடி, தஞ்சாவூர், தேனி, வேலூர், கோயம்புத்தூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய எட்டு அரசு மருத்துவமனைகளில் மகப்பேறு கட்டடம் கட்டும் பணிக்கு ரூ.48.00 கோடிக்கு அரசு அனுமதி அளித்தது. இதில், செங்கல்பட்டு தவிர, அனைத்து இடங்களிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் பிப்ரவரி 2013–ல் முடிக்கப்படவுள்ளது. செங்கல்பட்டு பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது.

சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள மருத்துவம் மற்றும் ஊரக நல இயக்குநர் அலுவலக வளாகத்தில் அவசரகால மேலாண்மை பொறுப்பு மையத்தின் மத்திய கட்டுப்பாட்டு அறைக்கு புதிய கட்டடம் கட்டும் பணி ரூ.12.37 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**3.4.4. தேசிய ஊரக நல்வாழ்வுத் திட்டம் (மைய அரசு உதவி பெறும் திட்டம்)**

**2012–2013–ம் ஆண்டில் முடிக்கப்படவுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் / துணை சுகாதார நிலையங்கள் மற்றும் இதர மருத்துவமனைக் கட்டடங்கள் பற்றிய விவரங்கள்:**

| வ. எண். | பணியின் பெயர் | தொகை (ரூ. கோடியில்) | முடிக்கப்பட்ட பணிகள் | 2012–2013–ம் ஆண்டில் முடிக்கப்படவுள்ள பணிகள் |
|---|---|---|---|---|
| 1. | 75 இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை, 30 படுக்கை வசதிகளுடன் தரம் உயர்த்தும் பணி. | 45.01 | 74 | 1 |
| 2. | 50 இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை, 30 படுக்கை வசதிகளுடன் தரம் உயர்த்தும் பணி. | 31.00 | 43 | 7 |
| 3. | 120 இடங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டும் பணி. | 26.05 | 94 | 26 |
| 4. | 20 இடங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டும் பணி. | 4.62 | 18 | 2 |



| | | | | |
|---|---|---|---|---|
| 5. | 2008–2009–ம் ஆண்டில் கைவிடப்பட்ட பணிகளில் 26 பணிகளை மேற்கொள்ளுதல். | 16.81 | 24 | 2 |
| 6. | மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகம் மூலம் கண்டறியப்பட்ட 12 இடங்களுக்கான–19 பணிகள். | 17.67 | 12 | 7 |
| 7. | 14 ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள் கட்டும் பணி. | 5.66 | 11 | 3 |
| 8. | அரசு மருத்துவமனைகளில் கூடுதல் வசதிகள் அளித்தல் – 505 பணிகள். | 35.24 | 469 | 36 |
| 9. | 42 இடங்களில் முதனிலை பரிந்துரைப் பிரிவு கட்டடம் கட்டும் பணி. | 31.92 | 6 | 36 |
| 10. | அரசு மருத்துவமனைகளில் கூடுதல் வசதி அமைத்துத் தரும் 586 பணிகள். (இரண்டாம் கட்டம்) | 38.45 | 383 | 203 |
| 11. | 50 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்தும் பணி. | 11.00 | 5 | 45 |

| | | | | |
|---|---|---|---|---|
| 12. | 26 இடங்களில் அரசு மருத்துவமனைகளை தரம் உயர்த்தும் பணி. | 16.38 | –– | 26 |
| 13. | ஆர்.சி.எச். – சிறு கட்டுமானப் பணிகள் (பகுதி 3) – 622 பணிகள். | 41.10 | 6 | 616 |
| 14. | ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்துதல். (26 இடங்கள்) | 16.38 | –– | 26 |
| 15. | புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டும் பணி. (29 இடங்கள்) | 6.56 | –– | 29 |

3.4.5. மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் ரூ.2.64 கோடி மதிப்பீட்டில் மகப்பேறு கட்டடத் தொகுதி கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி ஜுலை 2012–ல் முடிக்கப்பட உள்ளது.

### 3.5. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

3.5.1. 2012–2013–ம் ஆண்டில் கட்டி முடிக்கப்படவுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப்



பணி நிலைய கட்டடங்களின் விவரங்கள் பின்வருமாறு :

| வ. எண். | பணி நடைபெறும் இடம் | தொகை (ரூ. இலட்சத்தில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | பேரம்பாக்கம் | 38.33 | பணி நடைபெற்று வருகிறது. இலக்கு : மே 2012. |
| 2. | கீழ்பென்னாத்தூர் | 36.72 | பணி நடைபெற்று வருகிறது. இலக்கு : மே 2012. |
